Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருமலை சமணர் கோயில் சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள்

**வினிதா & முனைவர். பொ.ஸ்டுபர்ட் சிபி**
**நுண்கலைத்துறை, அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி**
stubertsibi@gmail.com,

29

**ஆய்வு நோக்கம்**

திருமலை சமணர் கோவிலில் காணப்படும் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களை குறித்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுச் சுருக்கம்**

சமண சமயம் இந்தியா முழுமைக்கும் செழுத்தோங்கி இருந்த காலகட்டத்தில் தமிழகத்திலும் சமணர்கள் குடைவரைகள் கோயில்கள் போன்றவைகளை அமைத்து அதன்மூலம் ஓவியக்கலை சிற்பக்கலை போன்ற கவின்கலைகளை வளர்த்து வந்துள்ளார்கள். சமணர்களின் முக்கியமான இடமாக திருமலை சமணர் கோவில் திகழ்ந்து வந்துள்ளது. இங்கு காணப்படக்கூடிய ஓவியங்களும் சிற்பங்களும் கல்வெட்டு செய்திகளும் அதற்குரிய ஆதாரங்களாக திகழ்கின்றன. சேரர், சோழர், பாண்டியர் மற்றும் பல்லவ மன்னர்கள் சமணர்களை ஆதரித்துள்ளார்கள் குறிப்பாக சோழ இளவரசி குந்தவை திருமலையில் ஒரு கோயிலை கட்டி திருப்பணிக்கு தானம் வழங்கி உள்ளார். மகாவீரர் கோயிலில் 24 தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. பசுவநாதர் கோயிலில் பசுவநாதர் சிற்பம் ஐந்து தலைகளை கொண்ட பாம்புடன் அமைக்கப்பட்டுள்ளது. சமணர் குகையில் மூன்று அறைகளிலும் ஓவியங்கள் காணப்படுகிறது. இவ்வாறு கவின்கலைகள் சமண சமய கூறுகளை தன்னகத்தேகொண்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** திருமலை, சமணர் கோயில், சிற்பங்கள், ஓவியங்கள், சுவரோவியங்கள்.

**முன்னுரை**

இந்தியாவிலுள்ள பிகார் மாநிலத்தில் வைசான மாவட்டத்தில் குந்தி கிராமத்தில் சித்தார்த்தர், திருசபை ஆகியோருக்கு பிறந்த மகாவீரர் அவர்களால் சமண சமயம் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. சமண சமயம் (ஜைன மதம்), ஆருகத மதம், நிகண்ட மதம், அநேகாந்தவாத மதம், ஹியாத்வாத மதம் என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. சமண சமயக் கொள்கைகளை உலகத்திற்கு போதித்தவர்கள் தீர்த்தங்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். மகாவீரர் சமண சமயத்தில் 24-வது தீர்த்தங்காரர்ஆவார். இவரே இச்சமயத்தில் கடைசி தீர்த்தங்காரர் ஆவார். இந்த 24 தீர்த்தங்காரர்களையும் கடவுளாக எண்ணி இவர்கள் மக்களாலும், சமண துறவிகளாலும் வணங்கப்படுகின்றனர். சமண சமயத்தின் 24 தீத்தங்காரர்களில் முதல் தீர்த்தங்காரரான விருப தேவர் சமண சமயக் கொள்கைகளை உருவாக்கி உலக மக்களுக்கு போதித்தார் என ஆய்வுகள் கூறுகின்றது. தமிழ்நாட்டிலும் சமணர்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் பரவிய காலகட்டத்தில் அவர்களின் கட்டடக்கலை சிற்பகலை மற்றும் ஓவியக்கலை போன்ற கவின் கலைகள் வளர்ச்சிப்பெற்றுள்ளது.

**தமிழ்நாட்டில் சமணம்**

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் சந்திரகுப்தரின் அரசவை குருவான பத்திரபாகு முனிவர் தன் பன்னிரெண்டாயிரம் சீடர்களுடன் தென்இந்தியா நோக்கி வந்து மைசூர் சரவண பெலகுலாவில் நிலைபெற்றனர். பத்திரபாகுவின் சீடராகிய வைசாக முனிவரால் தமிழ்நாட்டில் சமண சமயமானது பரவ தொடங்கியது. மூன்றாம் நூற்றாண்டிற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே சமணர்கள் தமிழகத்திற்குள் வந்திருக்க வேண்டுமென்று ஆழ்வார்கள் பல சான்றுகளுடன் கூறுகின்றனர்.

சமண சமயமானது தமிழ்நாட்டில் ஒரு விரிவான சமய வரலாற்றைக் கொண்டுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டில் புதுக்கோட்டை, மதுரை, விழுப்புரம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் சமணர்கள் கோவில்களையும், குடைவரைகளையும் உருவாக்கி வாழ்ந்துள்ளனர். மதுரை சுற்றி 26 குகைகள், 200 சமணர் படுக்கைகள், 60 கல்வெட்டுகள் மற்றும் 100 க்கும் மேற்பட்ட சிற்பங்கள் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை ஆட்சி செய்த பல்லவர்கள், பாண்டியர்கள் மற்றும் சோழர்களால் சமண சமயம் ஆதரிக்கப்பட்டது. இதன் காரணமாக மன்னர்கள் சமணர்களுக்கு கோவில்கள், குடைவரைகள் அமைத்து அதில் சிற்பங்களையும் ஓவியங்களையும் நிறுவினார்கள். அவற்றில் திருமலை சமணர் கோவில் குறிப்பிடத்தக்கது.

**திருமலை சமணர் கோயில்**

வரலாற்று சிறப்புமிக்க திருமலை சமணர் கோவில் இந்தியாவின் தமிழ்நாட்டிற்கு உட்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து 49 கி.மீ தொலைவில் வடக்கு நோக்கி போளூரிலிருந்து ஆரணி செல்லும் வழியில் உள்ள வடமாதி மங்கலத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் 12.5106641 என்ற அட்சரேகை மற்றும் 99.1268197 என்ற தீர்க்கரேகையில் அமைந்துள்ளது. 'வைகை திருமலை' என்றும் வைகையின் புனிதமலை என்றும் திருமலையை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

கி.பி 7-ம் நூற்றாண்டில் சமணத் துறவிகள் திருமலைக்கு வந்ததாக கூறப்படுகிறது. சுருதக்கேவலி பத்திரபாகு துறவிகள் வட இந்தியாவிலிருந்து எண்ணாயிரம் துறிவிகளுடன் திருமலைக்கு வந்துள்ளனர். இங்கு குந்தவை சமணர் கோயில், மகாவீரர் கோயில், பார்சுவநாதர் கோயில் என மூன்று சமணர் கோயில்களும் மூன்று அறைகளாக பிரிக்கப்பட்ட சமணர் குகையும் காணப்படுகிறது.

**1. குந்தவை சமணர் கோயில் சிற்பங்கள்**

சோழ வம்சத்தை சார்ந்த இளவரசி இராஜராஜசோழனின் சகோதரியான குந்தவையால் இக்கோவிலானது 10-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இதனால் இக்கோவிலுக்கு குந்தவை சமணர் கோயில் என்று பெயர் வைத்துள்ளனர். இக்கோயிலானது திருமலை மலையின் உச்சில் மகாவீரர் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது. இக்கோயில் கருவறை, அந்திராலம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் மற்றும் முக மண்டபம் போன்றவற்றை கொண்டு சிறந்து விளங்குகின்றது. கோவில் முக மண்டபமானது 16-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

கருவறையில் 24 தீர்த்தங்கார்களில் 22-வது தீர்த்தங்காரான நேமிநாதரின் சிலையானது நிறுவப்பட்டுள்ளது. கோவிலின் தெற்கு நடைப்பாதையில் ஸ்ரீவதீப சிம்ம முனிவரின் மோட்சத்தை

நினைவுகூறும் வகையில் ஒரு மேடையில் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீ பிரம்மதேவர் மற்றும் ஸ்ரீ ஜீவாலமாலனி சிலைகளும் இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. சமணர் கோவிலின் வடக்குப் பகுதியில் பல சன்னதிகள் அமைந்துள்ளன. பாறைகளின் மேற்புறத்தில் சிற்பங்கள் காணப்படுகின்றன. கூமாண்டினி சன்னதி இதில் முக்கியமானதாக கருதப்படுகிறது. இச்சிலையானது நான்கு அடி உயரத்தில் சிங்கத்தின் மீது நின்று கொண்டு பக்கத்தில் இரண்டு பெண்கள் மற்றும் ஒரு பணிபெண்ணுடன் நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது. இங்கு பாகுபலி சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளது. அவருக்கு இருபுறமும் இரண்டு சகோதரிகளும் தலைக்கு மேலே முக்குடையுடன் ஸ்ரீ ஆதிநாதரும் இருப்புறமும் அமர்ந்த கோலத்தில் சாமர பணிப்பெண்களும் அமைக்கப்பட்டுள்ளது. பார்ஸ்வநாதர் சிலையானது நான்கு அடி உயரத்தில் நின்ற கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோவிலின் கருவறையில் அமைக்கப்பட்டுள்ள நேமிநாதரின் சிலை 16.25 அடி ஒற்றைக்கல்லால் செய்யப்பட்டது. இந்த சிலையானது தமிழ்நாட்டின் மிக உயரமான நேமிநாதர் சிலையாகும்.

குந்தவை சமணர் கோவில் நேமிநாதரின் சிலைக்கு பின்புறத்தில் சுவரில் சுவரோவியங்கள் காணப்படுகின்றது. இவை சுண்ணாம்பு சிற்பங்களுக்கு மேல் தீட்டப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலநிற வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**2. மகாவீரர் கோயில் சிற்பங்கள்**

மகாவீரர் கோயிலானது மலையின் அடிவாரத்தில் குந்தவை சமணர் கோயிலுக்கு மேற்கு பக்கத்தில் அமைந்துள்ளது. இவை 16-ம் நூற்றாண்டில் விஜயநகரா ஆட்சிகாலத்தில் கட்டப்பட்டவையாகும். அக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் மற்றும் முக மண்டபம் தரைமட்டத்திலும் கொண்டு விளங்குகிறது.

இக்கோவிலின் கருவறையில் மூலவராக நான்கு அடி உயரத்தில் மகாவீரரின் சிலையானது சுண்ணாம்புச் சாந்தால் செய்யப்பட்டுள்ளன. மகாவீரர் சிலையின் பின்புற சுவரில் சுவரோவியங்கள் தற்போது சிதைந்த நிலையில் காணப்படுகிறது. கோயிலின் நான்கு பக்க சுவரிலும் 24 தீர்த்தங்காரர்களின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் இராஜராஜசோழன் மற்றும் ராஜேந்திர சோழனின் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகிறது.

**3. பார்சுவநாதர் கோயில் சிற்பங்கள்**

இக்கோயிலானது மலையின் உச்சியில் உள்ளது. இக்கோயில் ஏகதள விமானத்தோடு அமைந்துள்ளது. கருவறையில் பார்சுவநாதர் நின்ற நிலையில் பின்புறம் ஐந்து தலைகளைக் கொண்ட பாம்புடன் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பீடத்தில் கல்தகடும் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கோயிலை ஸ்ரீ விருபசேனர், ஸ்ரீசமந்தபத்ர கணதரபகரின் காலடி தடமும், வடக்கில் ஸ்ரீ வரதத்தாசசாரயரின் காலாடி தடமும் பொறிக்கப்பட்டுள்ளது.

**திருமலை சமணர் குகை ஓவியங்கள்**

சமணர் குகைகளில் காணப்படும் சுவரோவியங்கள் 15 மற்றும் 17-ம் நூற்றாண்டில் வரையப்பட்டவையாகும். திருமலை சமணர் கோயிலுக்கு அருகில் பாறைகளுக்கு இடையில் சமணர்

குகை அமைக்கப்பட்டுள்ளது. இது ஒன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இக்குகைகள் மூன்று அறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. திருமலை குகை ஓவியங்களில் தீர்த்தங்கரர்கள் அக்கால மகளிர்கள், கூத்தாடி கலைஞர்கள், அரசர்கள், வானவியல் செய்திகள், விதானத்து பூவேலைப்பாடுகள், சமவசரணம் ஓவியங்கள், இசக்கியம்மன் ஓவியங்கள் போன்ற ஓவியங்கள் உயிரோட்டமாக வரையப்பட்டுள்ளன. ஆனால் அவை காலத்தால் பழமையானவை அதலால் அழிந்து சிதிலமடைந்து எஞ்சிய குறியீடுகளாய் காணப்படுகின்றன.

**துவார பாலகர்கள் ஓவியங்கள்**

திருமலை குகைக்கு செல்லும் நுழைவாயிலின் இருபுறமும் வாயில் காப்போர் (துவாரபாலகர்) உருவங்கள் வரையப்பட்டுள்ளன (படம்–1). நான்கு கைகள், இரண்டு கால்கள், ஒரு தலையும், தலையில் ஜடா மகுடமும், இடது காலை கதையின்மீது ஊன்றியவராகவும், வலது காலை கீழே ஊன்றியவராகவும், வலது மற்றும் இடது பின் கைகள் பாம்பை பிடித்தவாரும், இடது முன் கையில் கதையை கீழே ஊன்றியவாரும் வரையப்பட்டுள்ளார்கள்.

**இசக்கி அம்மன் ஓவியம்**

சமண சமயத்தில் இசக்கி வழிபாடு மிகவும் முக்கிய இடம்பெறுகிறது அதன் அடிப்படையில் இசக்கி அம்மன் ஜுவாலா மாலினியின் ஓவியம் இங்கு வரையப்பட்டுள்ளது. (படம்–2) ஒரு ஆள் உயரத்திற்கு நின்ற நிலையில் மிகவும் உயிரோட்டமாக இசக்கி அம்மன் ஓவியம் காணப்படுகிறது. தமிழகத்தில் உள்ள இசக்கியம்மன் உருவங்களிலேயே காலத்தால் முற்பட்டது திருமறையில் காணப்படும் கிபி பத்தாம் நூற்றாண்டை சார்ந்த இசக்கி ஓவியம் ஆகும்

**சமவசரணம் ஓவியம்**

மூன்றாம் அறையில் மிக முக்கியமான சமவசரணத்தை சித்தரிக்கும் ஓவியம் காணப்படுகிறது (படம்–3). சமவசரணம் ஓவியமானது ஞானம் பெற்ற தீர்த்தங்கரர்கள் இந்திரன் அமைத்த மேடையில் அமர்ந்து துறவு கூறும் வாழ்வியல் நெறிகளை உரையாக நிகழ்த்துவர். அந்த உரையை விலங்குகள், பறவைகள், சமணத்துறவிகள், பொதுமக்கள், தேவர்கள், நரகர்கள், விலங்குகள், தவமுனிவர்கள், ஆண்கள் பெண்கள் அரசர்கள், அரசிகள் என அனைவரும் சமமாக அமர்ந்து கேட்பார்கள். இது போன்ற சமூக சரணம் ஓவியங்கள் திருப்பறித்திதிகுன்றத்தில் காணப்படுகிறது. கிபி இரண்டாம் நூற்றாண்டு அல்லது ஏழாம் நூற்றாண்டை சார்ந்த தமிழ் இலக்கியமான பெருங்காதையில் சமவ சரணம் ஓவியங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

இங்கு காணப்படும் சமவசரணம் ஓவியத்தில் துறவியானவர் நடுவே அமர்ந்தவாறு அவரை சுற்றி பெண்கள், துறவிகள், போன்றவை நின்றுக்கோண்டு அவர் கூறும் வாழ்வியல் நெறிகளை கேட்டுக்கொண்டிருப்பது போன்று அமைந்துள்ளது. இந்த ஓவியத்தில் பெண்களின் உருவம் நேர்த்தியாகவும் உடல் முழுவதும் அணிகலன்கள் அணிந்து அலங்காரத்துடன் நின்றுக்கொண்டும், பெண் துறவிகள் வெண்மையான ஆடை அணிந்து தலையில் துணிபோரத்தியவாறும் காணப்படுகின்றனர். பசுக்கள், ஆடு, நாய், சிறுத்தை போன்ற விலங்கு இதில் இடம் பெற்றுள்ளன. இந்த ஓவியமானது நடுவில் துறவியும் அவரை சுற்றி வட்டமாக மற்றவர்களும்

நின்றவாறு அமைந்துள்ளது. மேலும் பார்சுவநாதர், அம்பிகா, பாகுபலி ஆகியோரின் ஓவியங்களும் மூன்றாம் அறையில் தீட்டப்பட்டுள்ளது.

**இசக்கி அம்பிகாவின் வாழ்க்கை வரலாறு**

உள் அறை மேற்கு மற்றும் தெற்கு சுவற்றில் அலங்கார ஓவியங்கள் காணப்படுகின்றன. இந்த சுவரை மூன்று கிடைமட்டமாக பிரித்து , அதில் இயக்கி அம்பிகாவின் (நேமிநாதரின் இசக்கி) வாழ்க்கைச் சம்பவத்தை வரைந்துள்ளனர்(படம்–4). இவ்வறையின் விதானம் முழுவதுமாக அலங்கார வேலைப்பாடுகளால் உள்ளது. ஒவ்வொரு காட்சி மற்றும் அலங்காரக் கூறுகளும் நான்கு புறமும் எல்லைக் கோடுகளால் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்கூரை அலங்கார ஓவியங்கள்**

திருமலை சமணர் குகைகளின் இரண்டாம் அறையின் மேற்கூரைகளை அலங்கரிக்கும் விதமாக அலங்கார ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன (படம்–5). வட்டகமலத்தை சுற்றி நாசி தலைகளின் ஓவியமும், கொடிகருக்குகளும், சிறுசிறு பூக்களும் வரையப்பட்டுளளது. மிகசிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள போர்வை போல காணப்படுகிறது. இவற்றில் கருமையான பச்சைநிறம், மஞசள், காவிசிவப்பு போன்ற வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஓவியத்தின் நுட்பங்கள்**

திருமலை சமணர் குகைகளில் காணப்படுகின்ற ஓவியங்கள் செக்கோ சுவரோவிய நுட்பத்தில் வரைந்துள்ளனர். செக்கோ ஓவியமானது சுண்ணாம்பு கலந்த நிறமிகளை கொண்டு உலர்ந்த பிளாஸ்டரில் வரையப்படும் முறையாகும்.

உலர்ந்த முடிக்கப்பட்ட சுவர்கள் சுண்ணாம்பு போல் நனைக்கப்பட்டு ஈரமான நிலையில் வண்ணம் தீட்டப்படுகிறது. இதில் சுண்ணாம்பு, உமி, களிமண், அராபிக் பிசின், செங்கல் தூள், மணல் போன்ற பொருட்கள் பயன்படுத்தியுள்ளனர்;. வண்ணம் தீட்டுவதற்கு இயற்கையாக கிடைக்கக்கூடிய பழங்கள், செடிகள், கற்கள் போன்றவற்றை பயன்படுத்தியுள்ளனர்.

**முடிவுரை**

இவ்வாராக சமணர்கள் தங்களின் சமயத்தை தமிழ்நாட்டில் ஒரு வரலாற்று சமயமாக பரவசெய்துள்ளனர். அவர்களின் வாழ்நாளில் ஊர் ஊராக சென்று ஆங்காங்கே அவர்களுக்கு தங்கும் குகைகளையும், கோவில்களையும் அமைத்து தங்களின் தெய்வமாக கருதும் தீர்தங்காரர்களின் உருவத்தை சிற்பமாகவும், ஓவியமாகவும் நிலைநாட்டியுள்ளனர்.

**துணைநூல்பட்டியல்**

1. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், 2000
2. நடன. காசிநாதன், மா. சுந்தரமூர்த்தி, சமணத் தடம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2005.pg 117
3. ஐ. ஜோப் தாமஸ், 'தமிழக ஓவியங்கள் ஒரு வரலாறு',(காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ்(பி) லிட்.,2014, 2015.
4. முனைவர் இரா. நாகசாமி, ஓவியப் பாவை, (முதல் பதிப்பு 1979, இரண்டாம் பதிப்பு 2010 சென்னை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.